# நள்ளிரவில் ஒரு இரயில் நிலையத்தில்

மாடியிலிருந்து இறங்கி வந்தேன். ஹாலில் கூடை நாற்காலியில் பாட்டி உட்கார்ந்திருந்தாள். அவள் பக்கத்தில் ஒரு கூடை நிரம்பி வழியும் அளவுக்குப் பத்திரிகைகள். காமுப் பாட்டி 'காட்ராக்ட்' ஆபரேஷனுக்கு, திருநெல்வேலியிலிருந்து சென்னையிலுள்ள எங்கள் வீட்டிற்கு வந்து ஆறு மாதமாகிறது. பாட்டிக்கு என் அப்பா மூன்றாவது பிள்ளை, கடைக்குட்டி. செல்ல மகன் – என்னவோ சாக்கு!

ஆபரேஷன் ஆகி மூன்று மாதங்கள் கடந்ததும் பத்திரிகைகளை தானே படிப்பதில்லை. கண் பார்வை தளர்ந்து விடும் என்பதால் என்னைப் படிக்கச் சொல்லி, எனக்கு தினமும் ஒரு தண்டனை.

''பாட்டி சொன்னதைச் செய்யேன். பி.ஏ. முடிச்சிட்டு சும்மாதானே வீட்ல இருக்கே?'' அம்மா அதட்டினாள்.

என் கல்யாணத்திற்குப் பண மூட்டையை அவிழ்க்க பாட்டியைப் பெரிதும் நம்பியிருந்தார்கள் என் பெற்றோர்கள். பணத்தின் மேல் 'ஜம்'மென்று ஏறி உட்கார்ந்திருக்கும் பாட்டிக்கு அவர்கள் சலாம் போட்டதில் வியப்பில்லை. தம்பி 'கௌசிக்' இந்தியைப் பாடமாக எடுத்துத் தொலைத்து விட்டான்! அதனால் இந்த தண்டனையிலிருந்து அவன் தப்பி விட்டான்.

''கிழத்துக்கிட்ட அவதிப்படு'' என்பது போல் கண்களைச் சிமிட்டியபடி அவன் என்னைத் தாண்டி சைக்கிளை எடுக்க ஓடினான்.

''டேய் கௌசிக்! இன்னிக்கு காலேஜ் லீவுன்னு ஊர் சுத்தனுமா? இந்தியிலே நீ ரொம்ப 'வீக்'னு உங்கப்பன் அடிச்சுக்கறானே. போய் படி!'' பாட்டி போட்ட அதட்டலில் கௌசிக் அரண்டு போனான். என்னைப் பார்க்கத் துணிவின்றி மாடிப் பக்கம் விரைந்தான். அங்கே அவன் இந்தியா படிக்கப் போகிறான். 'காமிக்' புத்தகங்களுடன் உறவாடிக் கொண்டு இருப்பான். இருந்தாலும், ஊர் சுற்றல் நின்றதே அதுவே போதும்!

அம்மா டெலிபோனில் யாருடனோ பேசிக் கொண்டு இருந்தாள். ''சரோஜா! உன்னைத்தானே?'' பாட்டி அதட்டியதும் அம்மா திரும்பினாள்.

''டெலிபோன் எதுக்கு வச்சிருக்கு? வத்தக் குழம்பு வச்சயா? கல்யாணராமன் படம் பாத்தியான்னு சிநேகிதிகள் கிட்ட வம்பளக்கவா? அவசர ஆபத்துக்கு சமயத்துக்குன்னு வச்ச கம்பெனி 'போன்'. அதை துஷ்பிரயோகம் பண்ணலாமோ? படிச்ச பொண். உங்களுக்கெல்லாம்...'' பாட்டி பேச்சை முடிக்குமுன், அம்மா டெலிபோன் பேச்சை துண்டித்துவிட்டு சமையலறைக்குள் புகுந்து மறைந்து விட்டாள்.

பாட்டி வந்தது முதல் நான் பெல்பாட்டம், மாக்ஸி இவற்றைக் கண்ணால் கூடப் பார்க்க முடியவில்லை. ''பாட்டிக்கு இதெல்லாம் பிடிக்காது. புடவை கட்டிக்கோ'' அப்பாவின் உத்தரவு. புடவை அடிக்கடி என் காலைத் தடுக்கித் தொலைத்தது.

''நளினி! இங்கே வா!'' பாட்டி கூப்பிட்டதுமே எனக்குத் திகில். 'அத்தனை பத்திரிகையையும் படிக்கச் சொல்லுவாளே? பெரிய வம்பில் மாட்டிக் கொண்டு விட்டோமே?'

''கூப்பிட்டேளா பாட்டி?'' பதவிசாகப் பக்கத்தில் வந்து நின்றேன்.



''இந்தக் கதையைக் கொஞ்சம் உரக்கப் படி. நானே படிக்கலாம்னு நினைச்சேன். எழுத்துத் தெரியலே. பூச்சி பறக்கறது.''

பாட்டி எதிரில் தரையில் சம்மணம் கூட்டிக் கொண்டு (அப்படி உட்கார எனக்குப் பிடிக்காது) அவள் கொடுத்த பத்திரிகையை வாங்கிப் புரட்டி வேகமாகத் தங்கு தடையின்றி, அழுத்தம் கொடுக்க வேண்டிய இடத்தில் கொடுத்து, வேண்டுமென்ற நவரசங்களுடன் படித்தேன்.

பாட்டி திடீரென கோபத்துடன், ''நிறுத்து கன்றாவி'' என்று கத்தினாள்.

''ஏன் பாட்டி?''

''என்ன படிச்சே? மறுபடியும் படி!'' உத்தரவிட்டாள்.

''பாவம் குப்பாயி! அவள் கணவன் லாரி விபத்தில் குற்றுயிராகி ஆஸ்பத்திரியில் கிடந்தான். கையில் காசுமில்லை. குடிசைப் பானைகள் வெறுமையாகச் சிரித்தன. நாள் முழுவதும் பசி பட்டினியால் அவள் வயிறு தகித்தது. குழந்தைகளுக்கு வறுமை, இல்லாமையைப் பற்றி என்ன தெரியும்.

''அவை 'பசி பசி' என்று குடிசைக்குள் கோஷமிட்டன.

''பத்து மாதம் சுமந்து பெற்றவளின் குடல் வேதனையில் புரண்டது.

''முன்பு ஒருதரம் மேஸ்திரி ஐயா அவளிடம் அந்த ரங்கமா சொன்னது நினைவில் பளிச்சிட்டது.

''அஞ்சு பத்து வேணுமின்னா புள்ளே, பொழுது சாயரப்போ ஊட்டாண்டை வந்துக்க. நான் ஒண்டிக்கட்டை தான். நீ இன்னா ஜோரா இருக்கே புள்ளே!'' என்று கூறியவன் கண்கள், அவளது வாளிப்பான உடல்மீது பரவின. அந்த நினைப்பு.

''தா வாரேன். கண்ணுங்களா!'' குழந்தைகளைப் படுக்க வைத்து விட்டு அவள் இருளில் விரைந்தாள்.

''எனக்குத் தெரியும். நீ வருவேன்னு'' மேஸ்திரி பற்களைக் காட்டி வரவேற்றான்.

''அரண்மனை போல வீடு. அங்கே நிலவாய்ப் பொழிந்த குழல் விளக்கை அணைத்தான்... சிறிது பொழுதில் தடுமாறிக் கொண்டு வீடு திரும்பினாள் குப்பாயி. வழியில் வாங்கி வந்த பொட்டலத்திலிருந்த புறை ரொட்டியை எடுத்துப் பானை நீரில் தோய்த்துத் தூளியில் இருந்த குழந்தைக்கு ஊட்டினாள். மற்றொன்றை பெரியவனிடம் நீட்டினாள்.

''ரொட்டி வாங்க துட்டு ஏது?'' பெரிய பிள்ளை கேட்ட போது, குப்பாயி குலுங்கக் குலுங்க அழுதாள்.

''போதும் நிறுத்திக்கோ'' பாட்டி வீறிட்டாள். ''ஆஸ்பத்திரியில் புருஷன் கிடந்தா காலம்பரவே போயி ஒரு வீட்ல பத்துப் பாத்திரம் தேக்கிற வேலையை ஏன் தேடிக்கக் கூடாது?''

''தேடி இருப்பா, வேலை கெடைச்சிருக்காது?''

''மூடு வாயை! கதை எழுதி இருக்கிற மொட்டைக் கடன் காரனுக்கு நீ வக்காலத்தா? குடிசையில இருக்கிற குப்பாயிக்கு பொறை ரொட்டி வாங்க காசு இல்லாவிட்டாலும் சரி, கோமதி எக்ஸ்டென்ஷன் மாடியில இருக்கிற என்ஜீனியர் சேகர் பெண்டாட்டிக்கு 'லிப்ஸ்டிக்' வாங்கப் பணம் இல்லா விட்டாலும் சரி, இந்த ஒரே வழிதான் பொம்மனாட்டி களுக்குத் தோணுமா?''

''காலம் அப்படி இருக்கு பாட்டி!''

''எழுதினவனை விட, வக்காலத்து வாங்கிண்டு பேசறே! உன்னையே ரெண்டு முதுகில் போடணும் போல இருக்கு.



இதெல்லாம் படிச்சு உன் மனசெல்லாம் எப்பிடி கோணலா போயிருக்கு பாத்தியா? இப்ப நான் ஒரு கதை சொல்றேன் கேளு.''

அப்பாடா! பாட்டி கதை சொல்ல ஆரம்பித்து விட்டால், பத்திரிகை படிக்க வேண்டாம். விடிய விடிய கதை சொல்லுவாள் அவள். கவலை விட்டது!

பாட்டி தனது சோடா பாட்டில் கண்ணாடி மூலம் எங்கேயோ வெறித்தாள். கற்பனை சிறகடித்துப் பறந்தது போலும்.

''நான் சொல்றது உண்மை. ஆனால் பெயர், ஊர், காலம் எல்லாம் கற்பனை. சரியா?'' என்றாள் பாட்டி.

மாரப்பன்குடி சின்ன கிராமம். அந்தக் கிராமத்திலே பிறந்து வளர்ந்த பெண்தான் சியாமளா. சின்ன வயசிலேயே அம்மாவை இழந்து விட்டவள். ஆனால் துளி அதிர்ஷ்டம் அவள் பக்கம் இருந்தது.

இளையாள் பேச்சைக் கேட்காது, ராமரத்னம் தன் பெண்ணை, தன் சக்திக்கு ஏற்ற வகையில் நல்ல இடமாகப் பார்த்து, சீர் செனத்திகளுடன் கல்யாணம் செய்து விட்டான்.

மாப்பிள்ளை பம்பாயில் ஏதோ ஒரு கம்பெனியில் நல்ல வேலையில் இருந்தான். புக்ககம் போய் ஒரு வருஷம் ஆகவில்லை. சியாமளாவின் அப்பா திடீரென மாரடைப்பால் இறந்து விட்டார். சித்தி மரகதத்திற்குக் குழந்தை குட்டி கிடையாது, என்றாலும் மூத்தாள் பெண் சியாமளா மேல் அத்தனைப் பிடித்தம் கிடையாது. ஆனால் வசிப்பது சிறிய கிராமம். தலை பிரசவத்திற்கு ஊருக்கு வந்திருக்கும் பெண்ணைக் கவனித்துத்தான் ஆக வேண்டும். சியாமளா வந்திருந்தாள். பிரசவம் ஆகி நான்கு மாதங்களாகி விட்டன. ஆண் குழந்தை என்று கணவன் நாகராஜனுக்கு மிக்க

மகிழ்ச்சி. மனைவியை சீக்கிரமாகவே பம்பாய்க்கு அனுப்பச் சொல்லிப் பல கடிதங்கள் போட்டு விட்டான். சியாமளா விற்கு வேறு வழி இருக்கவில்லை.

கையில் நான்கு மாதக் குழந்தை, சித்தி செய்து தந்த பட்சண டின், பெட்டி, படுக்கை, கூஜா சகிதம் அவள் புறப் பட்டாள்.

மரகதம் பம்பாய் வரை துணையாகச் சென்று பெண்ணைப் புருஷன் வீட்டில் சேர்ப்பிக்க வேண்டியதுதான் நியாயம். அறுவடை சமயம். கிட்ட இல்லாவிட்டால் குடி முழுகி விடும் என்று அவளுக்குக் கவலை.

சியாமளா நாலு வகுப்பு படித்தவள்தான். அவளை யொத்த பெண்கள் எத்தனையோ பேர் டில்லி, கல்கத்தா என்று தனியாகப் போகவில்லையா? பெண்கள் பெட்டியில் ஏற்றி விட்டால், பத்திரமாகப் போய் இறங்கிவிட மாட்டாளா? போதா குறைக்கு மரகதத்திற்கு இரண்டு நாளாகக் காய்ச்சல் வேறு.

சென்னையில் எழும்பூர், நிலையத்திற்கு மாமாவை வரச் சொல்லி கடிதம் போட்டிருந்தாள். அதனால் பயம் இல்லை என்ற துணிவு. சியாமளா செய்ய வேண்டிய காரியம் ஒன்றே ஒன்று தான். இரவு ஒன்பது மணி அளவில் வண்டி வாசவன் பேட்டையில் நிற்கும் மெயில் வண்டியில் ஏற வேண்டியது. நிலையத்தில் எத்தனையோ பேர்கள் இருப்பார்கள். எள் என்றால் எண்ணையாக நிற்க வேண்டிய வயது. கப்பலேறி வெளி நாடுகளுக்கெல்லாம் பெண்கள் பயணம் செய்ய வேண்டிய காலம். சித்தி மரகதத்தை என்ன, கல்லால் கட்டி சாந்தாலா பூசி இருக்கிறது? ஆகவே அவள் தீர்மானமாகச் சொல்லி விட்டாள். ''எல்லாம் தனியாகப் போகக் கத்துக் கணும்!''



சியாமளா சுபாவத்தில் மிகவும் சாது. சித்தி பேச்சுக்கு எதிர்ப்பேச்சுப் பேசுபவள் அல்ல. பிள்ளையார் படத்திற்குப் பக்கத்தில் இருந்து அலமாரியைத் திறந்து சம்புடத்திலிருந்து விபூதியை எடுத்து, நெற்றிக் குங்குமத்தடியில் கோடாக இட்டுக் கொண்டாள்.

முற்றத்திலே ஓங்கி வளர்ந்திருந்த வேப்ப மரத்தின் ஒரு கொத்தை எடுத்து லேசாகத் தலையில் சொருகினாள். பிள்ளையாரை நமஸ்கரித்தாள். சித்தியை நமஸ்கரித்து விட்டு மாட்டு வண்டியில் ஏறிக் கொண்டாள். பக்கத்து வீட்டு ராஜு தான் அவளை வண்டியில் ஏற்றி விட்டு வர ஒப்புக் கொண்டு இருந்தான்.

மாலை ஐந்து மணிக்கு வந்து ஐந்து நிமிடம் நின்ற பாஸெஞ்சரில் பெண்கள் பெட்டியில் அவளைத் திணித்து, கையை அசைத்து விட்டு அவன் கிளம்பி விட்டான்.

கையில் கடிகாரம் போட்டுக் கொள்ளாத கிராமப்புறம் அவள். 'தடக், தடக்'கென்று தாலாட்டிய வண்டியின் ஆட்டத்திலே வண்டிக்குள்ளிருந்த பெண்கள் தூக்கத்தில் ஆடினர். சியாமளாவுக்கும் உறக்கம் வந்து விட்டது. மடிமீது குழந்தையுடன் ஜன்னலோரமாக ஒண்டியிருந்த அவளும் அலுப்புடன் உறங்கி விட்டாள்.

வண்டி ஒரு குலுக்கலுடன் நின்ற போது திடுக்கிட்டு விழித்துக் கொண்டாள். எட்டிப் பார்த்தாள். அமாவாசை இரவு ஒரே 'கரு கும்' என்றிருந்தது. 'மினுக்'கென்று எங்கேயோ தெரிந்த வெளிச்சம்! மரம் எழுப்பிய நிழலில் தூக்கக் கலக்கத்தில் 'பேட்டை' என்ற எழுத்துக்களைப் பார்த்த பிரமை.

''ஐயையோ! தூங்கிட்டமே'' - அலறி அடித்துக் கொண்டு குழந்தையைத் தூக்கித் தோளில் வாரிப் போட்டுக்

கொண்டாள். பக்கத்திலிருந்த ஒரு நல்ல பெண்மணி, அவளது டின் மூட்டைகளை வெளியே தூக்கிப் போட்டு உதவினாள். வண்டியினின்று கூஜாவும் குழந்தையுமாக அவள் 'தொப்' பென்று கீழே குதித்தாள். அவள் எதுவும் யோசிக்குமுன் வண்டி நகர்ந்து விட்டது.

சாமான்களை ஒவ்வொன்றாகத் தூக்கி அந்த மரத்தடியில் வைத்துக் கொண்டாள். சுற்றுமுற்றும் பார்த்தாள், சற்றுத் தொலைவில் ஒரு சிறு காரைக் கட்டடம்! மங்கிய விளக்கு வெளிச்சம் ஜன்னல் வழியே தெரிந்தது.

அதுதான் நிலையமோ ஊன்றிப் பார்த்தபோது ஒரு மனிதனின் தலை தெரிந்தது. எங்கேயோ ஒரு தவளையின் குரல்! மற்றபடி மயானத்தின் பயங்கர அமைதி.

சியாமளாவின் நெஞ்சு திகிலில் தீவிரமாக அடித்துக் கொண்டது. 'பிள்ளையாரப்பா! தன்னந் தனியா இருட்ல...' அதுக்கு மேல் சிந்திக்கவும் முடியாதபடி அச்சத்தில் அரண்டு போனாள். 'கரக்' 'கரக்'கென்று அருகில் கேட்ட சப்தம் அவளைத் தொடர்ந்து சிந்திக்க விடவில்லை.

சமயம் பார்த்து அதுவரை தூங்கிக் கொண்டிருந்த குழந்தை, பசி போலும், உரக்க அழத் துவங்கியது.

''யாரது?'' ஒரு அதட்டலான ஆண் குரல் – கையில் பிடித்த 'டார்ச்சை' அவள்மீது சுழற்றியபோது, குழந்தையை மார்புடன் அணைத்தபடி நடுங்கியவாறு நின்றாள் அவள்.

''நான் மெட்ராஸ் போணும். மெயிலுக்காக காத்துண்டு இருக்கேன். இது வாசவன் பேட்டைதானே?'' - கலவரத் துடன் குழறினாள்.

டார்ச் விளக்கை மீண்டும் அவள்மீது சுற்றினான் அவன். கழுத்திலே அவள் தாயார் விட்டுப் போன சொத்து மூன்று கொத்து தங்க சங்கிலி, காதுகளில் டால் அடித்த வைரக்



கம்மல், மூக்கில் வைர பேசரி, கையில் தங்க வளையல்கள்... உச்சி முதல் உள்ளங்கால் வரை ஆராய்ந்தான் அவன்.

''இது வாசவன்பேட்டைதானே? சென்னை மெயில் எப்ப வரும்? நீங்க யார்னு...'' பேச்சுத் திணறியது அவளுக்கு. அழும் குழந்தையை மார்புடன் அணைத்து சமாதானப்படுத்த முயன்றாள். ஏதோ தவறு நடந்து விட்டது என்ற உள்ளுணர்வில் தேக முழுவதும் நடுங்கியது.

''வாசவன்பேட்டை தாண்டிப் போயிட்டுதே! பயப் படாதீங்க! மெயில் வண்டியில்தானே ஏறணும்? நான் உதவி செய்யறேன்.''

''நீங்க?''

''நான் இந்த நிலையத்தில் ஸ்டேஷன் மாஸ்டர்.''

அது நிலையம் அல்ல. அவன் ஸ்டேஷன் மாஸ்டரும் அல்ல. அங்கு எந்த வண்டியும் நிற்காது என்பதை அவன் சொல்ல விரும்பவில்லை!

''அம்மா! நீங்க ஏறிப் போற வண்டி பாதி ராத்திரியிலே தான் வரும். சேதி வந்திருக்குது. அதோ தெரியுதே, அதுதான் நான் தங்கற எடம். குழந்தையோட நீங்க அங்கு போய் தங்குங்கோ. வண்டி வற சமயத்துக்கு நான் வந்து கூப்பிடறேன்.''

''தெய்வம் போல் நீங்கள் உதவி செய்யறதுக்கு நன்றி'' என்று கூறியபடியே அவள் நகர்ந்தாள். மிகவும் சிரத்தையுடன் அவளது மூட்டை முடிச்சுகளைத் தூக்கிக் கொண்டான் அவன். 'டார்ச்' விளக்கில் அவன் வழிகாட்டி அந்தக் காரைக் கட்டடத்திற்குள் நுழைந்தாள் அவள்.

''இங்க நீங்க இரவு குழந்தையோடு இருங்க'' என்று கூறி விட்டு அவள் சாமான்களை வைத்து விட்டு வெளியே சென்றான்.

அப்போதுதான் அவள் கவனித்தாள். பிடி மீசை, மழிக்கப்படாத தாடை, கட்டுமஸ்தான் உடல், அவனை நினைத்ததுமே அவள் பயத்தில் ஆடிப் போனாள். தன்னந் தனியே இருட்டில் முன்பின் தெரியாத ஒரு முரட்டு ஆண் பிள்ளையோடு... 'விநாயகப் பெருமானே!' பதை பதைத்தாள்.

சாமான்களை வைத்துவிட்டுப் பசியால் அலறிய குழந்தைக்குப் பால் கொடுத்தாள். ஒரு துணியைத் தரையில் விரித்துப் படுக்க வைத்தாள். கதவை சாத்த எழுந்தபோது தான் உணர்ந்தாள். கதவிற்கு உட்புறத் தாழ்ப்பாள் இல்லை. பகீ ரென்ற பயங்கர உணர்வு. இருந்தாலும் பெட்டி படுக்கையைத் தூக்கி கதவை மூடி அண்டம் கொடுத்தாள். தற்காப்பு செய்து கொண்டு சித்தி கொடுத்த புளியஞ்சாத மூட்டையை அவிழ்த்தாள். வயிற்றை சுருட்டியது. கூஜா நீரை எடுத்துக் குடித்தாள்.

வெளிப்புறம் சுவர்க் கோழியின் ரீங்காரம். ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தாள். ஒரே இருள். தூரத்தே இங்கு மங்குமாகப் பறந்த மின்மினிப் பூச்சிகளின் 'மினுக்' 'மினுக்' ஒளி. வேறு எதுவுமே புலப்படவில்லை. நேரம் யுகமாக நீண்டது போன்ற பிரமிப்பு.

'ஆமாம்! இப்போது மணி என்ன?' — அவளுக்குள்ளே கவலை. கண்ணசந்தால் காரியம் கெட்டுவிடுமோ என்ற அச்சம். கொட்டு கொட்டென்று விழித்துக் கொண்டிருந்தாள். காதைப் பிளக்கும் ஓசையுடன் ஒரு ரயில் அங்கே நிற்காமல் ஓடியது. விருட்டென்று எட்டிப் பார்த்தாள். ஊஹூம்! பின்னும் சற்று நேரத்தில் வேறு ஒரு வண்டி! எதிர் திசையில் வேகமாக நிற்காமல் ஓடிற்று. வண்டிகள் ஓடிய வேகத்தில் அந்தக் காரைக் கட்டடமே பொடிந்து விழுந்து விடுவதுபோல்



குலுங்கியது. அவள் மனம் அதற்கு மேல் பீதியுடன் குலுங் கியது. மூன்றாவது வண்டியும் பெருத்த ஓசையுடன் அங்கே நிற்காமல் போகவே அவளுக்கு அழுகையே வந்துவிட்டது.

'மெயில் வண்டி எப்போது வரும்? யாரிடம் கேட்பது?'

கட்டடத்திற்கு வெளியே கச்முசவென்ற குரல். அவள் அதிர்ந்து போனாள். என்ன எது என்று யோசிக்கு முன்னர், கதவை யாரோ பலமாகத் திறக்க முயன்றனர். அண்டம் கொடுத்திருந்த பெட்டி படுக்கைகள் அப்படியே தரையில் விழுந்தன. கை, கால் பதற கதவையே பார்த்தாள்.

''கெட்டிக்காரி! கதவுக்குப் பலத்த காவல் போட்டிருக்கியே!'' — அட்டகாசமாகச் சிரித்தபடி, பெட்டி படுக்கைகளைக் காலால் உதைத்தவாறு கையிலேந்திய அரிக்கன் விளக்குடன் உள்ளே வந்தான் மீசைக்காரன்.

''மெயில் வண்டி வந்துட்டுன்னு சொல்ல வந்தீங்களா?'' — பயத்தை விழுங்கிக் கொண்டு சியாமளா கேட்டாள்.

''இது ஸ்டேஷனுமில்லே. இங்க எந்த வண்டியும் நிக்காது. நான் ஸ்டேஷன் மாஸ்டருமில்லே. தெரிஞ்சிக்க...''

''ஐயையோ!''

''மரியாதையா கையில் காதுல கழுத்தில போட்டிருக் கறதை கழட்டிக் கீழே வச்சுடு. இல்லே...''

நெஞ்சும் நாவும் உலர மிரண்டபடி கழுத்திலிருந்த சங்கிலியைக் கழற்றியபோது பார்த்தாள் — அவன் மட்டும் தனியாக வரவில்லை. கூட இரண்டு கூட்டாளிகள் — முண்டாசும், மீசையும், அரைக்கை பனியனும் மடித்துக் கட்டின வேட்டியும், கையில் அரிவாளுமாக! அவர்களைப் பார்த்ததுமே அவளது சப்த நாடியும் ஒடுங்கிப் போயின.

''ஐயா! உங்களைக் கையெடுத்துக் கும்பிடறேன். எல்லா நகைகளையும் எடுத்துண்டு, என்னையும் என் குழந்தையையும் விட்டுடுங்கோ'' — கெஞ்சினாள்.

''சீ! கழுதை! எல்லா நகையையும் கழட்டு! பெட்டியில பணம் வச்சிருந்தா அதையும் எடு'' என்று மிரட்டியது ஒரு முரட்டுக் குரல்.

கைகள் உதற, பெட்டியைத் திறந்தாள். புடவை மடிப்பில் செருகி செலவுக்காக வைத்திருந்த பணம் நூறு ரூபாயை எடுத்து வெளியே தரையில் வைத்தாள். கழற்றிய நகைகளையும் உடன் வைத்தாள்.

''அந்தத் தாலி, அதையும்! எடு! பெரிய பத்தினி!'' — மிரட்டினான் மற்றவன்.

'பிள்ளையாரப்பா! இப்படியா சோதிப்பே?' என்று மனதினுள் அலறியபடி, தங்கக் கொடியையும் அதனுடன் இருந்த தாலியுடன் கழற்றிக் கீழே வைத்தாள்.

அரிக்கன் விளக்கைத் தீபாராதனை போல் சுழற்றி அவளைப் பார்வையிட்ட மீசைக்காரன் உரத்த குரலில் சிரித்தான்.

''என்ன அண்ணே! பொண்ணு எப்படி?'' என்று கேட்டபடி அருகில் வந்த அவன் வாயில் மதுவின் நெடி.

சியாமளாவிற்கு வயிற்றைக் குமட்டியது. ''தங்க நகை போதாது. இந்தத் தங்கச் சிலையும் வேணும் – என்ன சொல்றே?''

''உனக்கு மட்டுமா? எனக்கும் பங்கு வேணும்.''

''சண்டை வேணாம்! மூணு பேருமே பங்கு போட்டுக்கு வோம்.'' அசிங்கமாகச் சிரித்தான் மூன்றாமவன்.



சியாமளாவுக்குப் புரிந்து விட்டது. பாவிகள் அவளைக் கழுகுபோல் கொத்தி மானபங்கம் செய்யப் போகிறார் களா?... — அவளுக்கு வாந்தியும், மயக்கமுமாக வருவது போலிருந்தது. ஒரே கிலி. சுவர் ஓரமாக மெல்ல நகர்ந்தாள்.

''என்னடி ஓடப் பாக்குறியோ? எங்க ஓடுவே? எடக்குப் பண்ணாம இருந்தா உசிரோட போவே. இல்லாட்டி காரியம் முடிஞ்சதும் கழுத்தை வெட்டிப் புதைச்சிடுவோம்! ஹி! ஹி'' அவனது கோரச் சிரிப்பில் பதறிப் போனாள் அவள்.

'பிள்ளையாரே! இந்தப் பாவிகளிடமிருந்து தப்ப எனக்கு வழியே இல்லையா? மின்னலைப் போல் ஒரு எண்ணம் பளிச்சிட்டது, அவள் திடீரென துணிவையெல்லாம் திரட்டிப் புன்னகைத்தாள்.

''நீங்க சொல்றபடி கேக்கணுந்தானே? கொஞ்சம் வெளியே போக அனுமதிக்கணும்'' என்றாள்.

''பொய்! நம்பாதே!'' கத்தினான் ஒருத்தன்.

''சத்தியமா சொல்றேன். ரொம்பத் தண்ணீர் குடிச் சிட்டேன். ஒரே நிமிஷம் இந்தப் புடவைத் தலைப்பை வேணும்னா யாராவது பிடிச்சிக்குங்க'' – புடவைத் தலைப்பை ஒருவனிடம் கொடுத்தாள்.

அதற்குள் குழந்தை மெல்ல விழித்துக் கொண்டு அழத் துவங்கியது.

''டேய் குழந்தை இருக்குது எங்க போய்டுவா! விடு, போய் வரட்டும்'' என்றான் அரிக்கன் விளக்கு. ''பத்து எண்றத்துக்குள்ளாற திரும்பணும். இல்லே, நாங்களே வந்துடுவோம் ஜாக்கிரதை!''

''எங்கே போயிடுவே? குழந்தை எங்ககிட்ட இருக்கு. சீக்கிரம் வா!''

விர்ரென்று வெளியே வந்த சியாமளா கதவைத் தொட்ட போது வெளிப்புற தாழ்ப்பாள் கையில் பட்டது. மகிழ்ச்சி தாளவில்லை. புடவையை சரசரவென அவிழ்த்து விட்டாள். ஒரே எட்டில் கதவைப் பிடித்து இழுத்து வெளியே தாழிட்டாள். புடவையிலே ஒரு ஓரத்தைக் கிழித்து தாழ்ப் பாளின் வளையத் திற்குள் திணித்து பெரிதாக ஒரு முடிச்சைப் போட்டாள். அதற்கு மேல் அவளுக்கு நிற்க நேரமில்லை.

பள்ளத்திலிருந்து ஏறி, தண்டவாளத்தின் குறுக்கே ஓடி, மறுபுறம் குதித்து, இருட்டில் ஓட ஆரம்பித்தாள். இரவின் நிசப்தத்தில் அவர்கள் கதவைத் தடதடவென்று தட்டும் சப்தம் கேட்டது.

''வெளியே தாழ்ப்பாளா போட்டே? ஓடவா பாக்கறே? மரியாதையா திறக்கறயா, இல்லே உன் குழந்தையை கொன்னுடுவோம்! எங்கே போவே? கதவை உடைச்சிட்டு வந்து பிடிச்சிடுவோம்!'' ஓங்கி உரத்த குரலில் அவர்கள் கத்தினார்கள்.

'பாவிகள் குழந்தையை என்ன செய்தார்களோ!...' அது வீரிட்டு அலறிய அலறல் அவள் குடலை முறுக்கியது. உள்ளத்தைப் பதறச் செய்தது.

''ஐயா என் குழந்தை!'' என்று அலறியபடி கால் வைத்த இடமெல்லாம் தடுமாறியபடி இடறி விழுந்தபடி ஓடினாள், ஓடினாள், ஓடினாள்! எத்தனை நேரம் ஓடினளோ. இதயம் வாயில் வந்து வெடித்து விழும்படி, மூச்சுத் திணற ஓடினாள். வியர்வை ஆறாகப் பெருக்கெடுத்தது. கல் இடறிக் கால் கட்டை விரல் நகம் பெயர்ந்தது. ரத்தம் கசிந்தது. பொறுக்க முடியாத வலி. குழந்தையின் கதியைப் பற்றிய வலி நெஞ்சில். ஆனால் விடாமல் ஓடிக் கொண்டே இருந்தாள்.

சற்றுத் தொலைவில் ஒரு லாந்தர் விளக்குடன் யாரோ வருவது தெரிந்தது. அதன் மங்கிய ஒளியில் ஒரு வைக்கோல்



போர்! ஊன்றிப் பார்த்ததில் சில குடிசை வீடுகள். திடீரென ஒரு நாய் குரைத்தது.

''யாரது?'' அதட்டலாக லாந்தரை தூக்கிப் பிடித்தான் அந்த மனிதன்.

''இடுப்பிலே புடவைகூட இல்லே. உங்க மேல் வேட்டியைத் தந்தீங்கன்னா...'' சியாமளா விக்கி அழுதாள்.

மேலே போர்த்தி இருந்த பெரிய துண்டைச் சட்டென அவள்மீது வீசினான். இடையில் சுற்றிக் கொண்டாள் அவள்.

அது ஒரு சிறு கிராமம். வெயிலுக்காக வாயில் திண்ணையிலும் கொட்டிலிலும் படுத்திருந்த பலர் எழுந்து ஓடி வந்தனர். அருகில் வந்த பெண்மணி ஒருத்தி ஓடி வீட்டிற்குள் சென்று தன் சேலையை எடுத்து வந்து சியாமளாவிற்குக் கொடுத்தாள்.

கிராமம் முழுவதும் சற்று நேரத்தில் தலைவிரி கோலமும், அழுத கண்ணுமாக நின்ற அவளைச் சூழ்ந்து கொண்டனர். விம்மலுக்கிடையே அவள் சொன்ன சோகக் கதையைக் கேட்டதுதான் தாமதம், ஓர் இளைஞன் சைக்கிளில் தாவி பக்கத்துப் போலீஸ் ஸ்டேஷனுக்கு விரைந்தான்.

ஆளுக்கு ஒரு தடி, கம்பு, விளக்கு சகிதம் ஐம்பது பேர் கும்பலாகப் புறப்பட்டனர்.

மூச்சுவிட மறந்து திகைப்புடன் கதையைக் கேட்டு வந்த என்னால் பொறுக்க முடியவில்லை.

''கடைசியில் என்ன ஆச்சு பாட்டி?''

''என்ன ஆச்சு? அந்த மூணு பேரையும் போலீஸ் புடிச்சு தண்டனை குடுத்தா. ஊரே சியாமளாவின் துணிச்சலைப் புகழ்ந்தது.''

''குழந்தை என்ன ஆச்சு?''

''குழந்தையை அந்தப் பாவிகள் கொன்னுட்டா!''

''ஐயையோ!''

''சியாமளாவை சமாதானப்படுத்த கிராமமே அவளைச் சூழ்ந்துண்டுதாம். அவளை மார்போட அணைச்சிட்ட கிழவி, ''அழாதே ராசாத்தி! அடுத்த வருசமே ஆண்டவன் ஒனக்கு இன்னொரு ஆண் குழந்தையைக் குடுப்பான்'' என்றாளாம். அதுக்கு சியாமளா என்ன சொன்னா தெரியுமா?''

''ஒண்ணு என்ன? நாலு கூட தொடர்ந்து எனக்குப் பிறக்கத்தான் போறது. ஆனால் எத்தனை பிள்ளை பிறந்தாலும் என் ராஜாக் கண்ணுதான் என் மனசிலே நிறைந்திருப்பான். ஏன் தெரியுமா! பெத்த தாயின் மானத்தைக் காப்பாத்தின என் மகன் பிஞ்சு வயசிலேயே வீரன்! அவன் தீரன்!'' என்று அழுதாள்.

''கதை எப்படி'' பாட்டி கேட்டாள். நான் எங்கேயோ பார்ப்பதுபோல் நடித்தேன். அந்தப் பிஞ்சுக் குழந்தையின் மரணம் என் நெஞ்சைக் கனக்க வைத்து விட்டதே! பாட்டி லேசுபட்டவள் இல்லை. பெரிய கதைக்காரி. ஒரே மூச்சில் தன் கருத்தை அவள் வலியுறுத்தி விட்டாள்!

★ ★ ★